

# Rotaract Club Of Jaffna Mid-Town

(Sponsored by Rotary – Jaffna)

# ACHCHAANI

## Annual Bulletin

YEAR 2000

ROTARACT CLUB

BOOK 2

**R.I. DISTRICT 3220**

ROTARY 2000 :
ACT WITH
CONSISTENCY CREDIBILITY CONTINUTY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Greets you on your achievements in service to the people




Contact us for excellent Computer Service, installations and maintenance of Computers etc.

**Institute of Informatics Studies**
**100, Clock Tower Road, Jaffna.**
**(Affiliated with IMIS, UK)**

Tel.Phone : 021-2831 Email : iis@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாயிரமாண்டில் ஒரு
புத்துணர்ச்சியான ஆரம்பம்

# அச்சாணி

## 2000

## இதழ் – 2

வெளியீடு :

யாழ்ப்பாணம் நகர்மைய றோட்டறக்ட் கழகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை விபரம்

பெயர் : அச்சாணி
இதழ் : 2
பக்கங்கள் :. XII + 40 = 52
வெளியீட்டுத் திகதி : 2000 – 01 – 24
வெளியீடு : யாழ்ப்பாணம் நகர்மைய றோட்டரக்ட் கழகம். யாழ்ப்பாணம்.

# நூலாக்கக் குழு

ஆசிரியர் : Rtr ஜெ. பிரதீபன்

இணைஆசிரியர்கள் : Rtr சு. பிரதீப்
Rtr ஜெ. தாரிணி

அட்டை வடிவமைப்பு : Rtr சு. பிரதீப்


விளம்பரப் பிரிவு : Rtr பா. உமாகணேசன்
Rtr ம. பிரதீப்

விளம்பர ஆக்கம் : Rtr ஜெ. பிரதீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் இதயத்திலிருந்து .....



1998ல் எமது கழகம் மீள ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து புத்தாயிரம் ஆண்டில் காலடி எடுத்து வைத்த காலப்பகுதி வரையில் எமது கழகம் பெரும் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது. கழகம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் நிறைவுறும் இத்தருணத்தில் இதுவரையான கழக வரலாற்றில் அது பல இடையூறுகளை எதிர்கொண்டிருக்கிறது. 1995ல் ஏற்பட்ட வரலாறு காணாத மாபெரும் மனித இடப்பெயர்வில் எமது கழகமும் அள்ளுண்டு சென்றது. அக்காலப் பகுதிகளில் தடைப்பட்ட எமது செயற்பாடுகள் மீளக் குடியேறிய பின்னரும் உடனடியாக ஆரம்பிக்கமுடியாதவாறு குடாநாட்டு நிலமைகள் இருந்தது. ஆனபோதும் பழைய உறுப்பினர்கள் பலரும் இல்லாத நிலையிலும் இளைய புதிய உறுப்பினர்களின் தணியாத ஆர்வத்தினால் 98ன் நடுப்பகுதியில் கழகம் மீண்டும் அப்போதைய யாழ் றோட்டரி தலைவர் அ.பஞ்சலிங்கம் அவர்களால் உதயன் பணிமனையில் வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அன்று கொண்ட அதே உற்சாகத்துடன் எமது கழகம் புதிய நூற்றாண்டில் கால் பதிக்கும் அதே வேளை அத்தருணம் பலகாலமாக தடைப்பட்டு போயிருந்த எமது கழக சஞ்சிகையான அச்சாணி மலரை மலர வைப்பதில் பெரும் உவகை யடைகிறோம்.

இனி வருங்காலங்களில் அச்சாணி ஆண்டு தோறும் தன் வரவை மேற்கொள்ள இன்று போல் என்றும் உங்கள் ஆதரவை நாடி நிற்கிறோம்.

'சேவை செய்திட சேவை செய்வீர்'

நன்றி

Rtr S. அனுராஜ்
தலைவர்
யாழ் / நகர்மைய றோட்டரக்ட் கழகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE PAST PRESIDENT

My special blessings to Anu and his comates. I would also like to wish Anu to lead this Rotaract club to a golden path of victory in the new millenium.

It is not an exaggeration` to say that our club shooked hands in the midst of very many difficulties and reached a remarkable position and rank today in the hearts of all.

I bow my head to Rotarian past president panchalingam who had performed blessful dealings and lead us to a golden path of success.

My inner heart call upon our Rotarctors, Rotarians, and well wishers those who had co- operated and participated to hold this unity link should continue to Anu and make our aim a success.

We will act in the golden trible 'C' in this millenium.

Rtr A. Muralietharan
Imm past president



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE PRESIDENT (ROTARY CLUB OF JAFFNA)

Congratulations to each one of you for being able to produce a worthy publication titled 'Achchaani' within such a short space of time.

I am sure that this venture of yours will certainly give you the opportunity to exchange ideas, explore new career paths and develop new skills. As you take part in this valuable experience, I invite you to seek ways to support this millennium year's Rotary International theme:

Act with consistency, credibility and continuity

On the eve of the year 2000 the challenges we face are too big for just one person. But if each one of us does take part to the best of our ability, together our efforts may reach far beyond the needs of our own communities. My best wishes as you look for new visions for our society.

"The future has several names; for the weak it is the impossible; for the faint-hearted it is the unknown; for the thoughtful and valiant it is ideal".

– Victor Hugo

Rtr. K. Sripathy
President
Rotary club of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Felicitation

It is a pleasant task to send my greetings to the new president Rtr. Anurajh and his Board on the occasion of the installation in office. At the same time we must appreciate the tireless efforts of the past president Rtr murali and the tremondous leadership and resourcefulness he exhibited in putting the mid Town Rotaract club on the rails again after it had been defunct for three years. He and his team have made the club vibrant in fusing new blood. Good show, Rtr. Imm P. P. Murali.

Much is expected from the incoming president and I hope he will live up to our expectations.

Wish the club a very fruitful Rotaract year 1999/2000.

Rtr. P. P. A. Panchalingam
Past President,
Rotary club of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE PRESIDENT 1999/2000 OF ROTARACT CLUB KATUGASTOTA.

On behalf of the members of the Rotaract club of Katugastota I take this opportunity to congratulate the members of the Rotarac club of Jaffna Mid town on their club's 8th Charter Anniversary. It is a pleasure to note that your club has been revived and has completed a couple of useful projects despite other obstacles.

We sincerely hope that the Rotaract Club Of Jaffna Mid Town will be actively involved in Rotaract and keep the spirit of Rotary alive under the able leadership of President .

"Vision without action is delusion
Action without vision is aimless activity
Vision with action is the world's greatest hope"


Let these thoughts echo throughout your years of service to mankind.

Rtr . Gowri Rajan.
President of Rotaract club of Katugastota.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர கழகத்தினர் உள்ளத்திலிருந்து



இளமைப்பருவத்தில் இனிய சேவை, நட்புறவு என்பவற்றிற் கூடாக தேசத்தின் பௌதீக, சமூக தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட றோட்டரக்ட் கழகங்களில் ஒன்றாக யாழ். நகரமைய றோட்டரக்ட் கழகம் அணிசெய்யும் "அச்சாணி" மலரிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

அறிவு, ஆற்றல், ஒழுக்கம், கடின உழைப்பு, தியாக உணர்வு என்பவற்றின் வெளிப்பாடாகவே றோட்டரக்ட் கழக செயற்றிட்டங்கள் அமைகின்றன.

அந்த வகையிலே யாழ் நகர்மைய றோட்டரக்ட் கழகம், இலங்கையின் றோட்டரக்ட் வரலாற்றில் முதன்முதலில் தனக்கென ஒரு நிலையான இடத்தில் செயலகம் அமைத்து சிறப்பான பல சேவைகள் செய்த கழகமாகும். நாட்டு நிலைமை காரணமாக சில காலம் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்த கழகம், மீண்டும் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து குறுகிய காலத்திலேயே "அச்சாணி"ஐ வெளியிடுவதன் மூலம் தனது அங்கத்தவர்களின் திடசித்தத்தையும் மனோபலத்தையும் வெளிக் கொணர்கின்றது.

ஒழுக்கம், கடமை, கண்ணியம் பேணி இக்கழகத்தின் சேவை மேலும் விரிவடைய வேண்டும் என இறைவனை வேண்டி சுன்னாகம் றோட்டரக்டர்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

நன்றி

Rtr. S. கஜேந்திரா
முன்னாள் தலைவர்
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்

Rtr K. பிரதீபன்
தலைவர்
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE PRESIDENT 1999/ 2000 OF ROTARACT CLUB OF BATTICALOA

It gives me grate pleasur to pen this message to your souvenir on your clubs annual bulletin.

I am pleased to forward this message to offer my Congratulations to the new president and his team and wishing the club and he members every success in your endeavors during the ensuing year.

It is the wish of all especial the member of the Rotaract club should continue to serve the people of jaffna. To fulfil its objectives with unity and understanding in serving the people of Jaffna.

Rotaract movement offers wide opportunities for self development, understanding the community, through a frame work of friendship service, It is my sincere wish that these opportunities are made use of its optimum.

Yet it is worthy of note as to how club, performed being a club in the North East area at our country and feel they have managed to set an example for the other clubs in the District.

My congratulation and best wishes to the president and member if your club very best and a great future.



Your in Rotaract service
Rtr. R. Priyadharhan
President 1999 / 2000
Rotaract club of Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE IMMEDIATE PAST PRESIDENT OF THE ROTARACT CLUB OF TRINCOMALEE

It gives me great pleasure and pride that I send a message to the 2nd issue of the magazine "Achchaani" released by your club on the occasion of your 8th chartered Anniversary day.

Jaffna mid – town one of the elder member of the Rotaract family in R.I District 3220 has been doing good projects and still in active among the Rotaract clubs in jaffna. This Rotaract spirit of your club and other active clubs is the blood that keep the function of the Rotaract movement in R.I District 3220.

As the Best President for the year 1998 / 99 and as the Immediate past president, I wish all the very best to your president and members to succeed in every effort and to achieve a great please in Rotaract movement.

Once again On behalf of our President Rtr R.Sivasuthan and his board I wish you all success in the New millennium and this new year.

Your in Rotaract

**Rtr. R. Manivannan**

President 1998 / 99

Rotaract club of trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் உரை

நண்பர்களே ..............



சேவைக்கரங்களால்சேவித்து
சேர்ந்தியங்கின் சேர்வோமிலக்கு!

என்பதற்கிணங்க வளமான இளைஞர் பலத்தை நேர்வழியில் வழிநடத்தி இயங்குகிறது எமது கழகம்!

புதிய நூற்றாண்டில் நுழைந்துள்ள இத்தருணத்தில் புது வேகத்துடன் சேவைகளை வழங்க இக்கழகம் முனைப்பாகவுள்ளது.

இந்நிலையில் இதுவரைகாலமும் எமது செயற்பாடுகள் எப்படியிருந்தது என்பதை ஒருமுறை நினைவுகூறுவது பொருத்தமானது. அதன் விளைவே இச் சிறு மலர்.

கடந்தகால எமது செயற்பாடுகளை மட்டும் சமூகத்திலே பரப்பும் ஓர் பரப்புரை சஞ்சிகையாக இது அமையாமல் கழக அங்கத்தவர்களின் ஆளுமை, ஆற்றலை இனங்காட்டக் கூடிய ஒன்றாகவும், இச்சஞ்சிகை அமைய வேண்டு மென்ற நோக்கில் வேறு பல அம்சங்களும் இச்சஞ்சிகையில் இடம்பெறுகின்றன. இனி வருங்காலங்களில் பல பயன் தரு சுவையான அம்சங்களுடன் இவ்வாறான சஞ்சிகைகள் எமது கழகத்தில் இருந்து வெளிவரவேண்டுமென்ற எதிர்பார்ப்பிற்கு இச்சஞ்சிகை நம்பிக்கையூட்டுவதாய் அமைகிறது.

நீண்ட காலமாக எமது கழக வெளியீடாக இம்மலரை வெளியிட திட்டமிட்டு முயற்சித்த போதும் கழக நிதி நிலமை காரணமாக அது கைகூட வில்லை. ஆன போதும் புதிய மிலேனியத்தை வரவேற்கும் முகமாக இம்மலரை இன்றைய பொழுது வெளியீட வாய்ப்புக்கிடைத்தது மகிழ்ச்சிக்குரியது.

புதிய நூற்றாண்டு மலரும் வரையிலான காலப்பகுதியில் எமது கழகம் பாரிய செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளது. இதன் மூலம் பல பாதிக்கப்பட்ட மக்களிற்கும், மாணவர்களிற்கும் சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்றியுள்ளதுடன் கழக உறுப்பினர்களின் ஆளுமையை வளர்ப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளது.

இனி வருங்காலங்களிலும் கழகம் இத்தகைய செயற்பாடுகளில் முழு மூச்சுடன் ஈடுபடும் அதற்கு நண்பர்களாகிய உங்கள் ஆதரவு என்றும் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

'எம் கடன் பணி செய்து கிடப்பதே'

நன்றி

Rtr. ஜெ. பிரதீபன்
பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## உள்ளே.....


| | | |
|---|---|---|
| 01. | BIO - DATA | ( 01 ) |
| 02. | செயற்றிட்ட அறிக்கை (98/99) | ( 02 ) |
| 03. | செயற்றிட்ட அறிக்கை (99/2000) | ( 06 ) |
| 04. | முதல்திட்டத்தில் முகிழ்ந்திட்ட நினைவலைகள் - அனுபவம் | ( 10 ) |
| 05. | நதியோர நாணல்கள் - கவிதை | ( 14 ) |
| 06. | றோட்டரக்ட் கழகம் : ஏன்? எதற்கு? எப்படி? □ கட்டுரை | ( 15 ) |
| 07. | உங்கள் அறிவிற்கு ...... கேள்வி □ பதில் | ( 17 ) |
| 08. | கணனிக் காதலி □ கவிதை | ( 21 ) |
| 09. | செயற்குழு விபரம் | ( 23 ) |
| 10. | உறுப்பினர் விபரம் | ( 25 ) |
| 11. | நாகாக்க - கருத்தோவியம் | ( 28 ) |
| 12. | ஒரு நாட்பொழுதில் ...... விவரணம் | ( 32 ) |
| 13. | போதை □ கவிதை | ( 38 ) |
| 14. | சென்ற நூற்றாண்டில் | ( 39 ) |
| 15. | நன்றி நயப்புரை | ( 40 ) |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIO DATA

| | |
|---|---|
| திருநாமம் :~ | யாழ் நகர் மைய ரோட்டறக்ட் கழகம்<br>(Jaffna mid - town Rotaract club) |
| குடும்ப நாமம் :~ | ரோட்டறி (Rotary) |
| நோக்கம் :~ | சேவை |
| தேக்கம் :~ | சொந்தமிட்ட செயற்பாட்டு வேகம் |
| ஆரம்பம் :~ | 1992.01.16 (நாவலர் கலாச்சார மண்டபம்) |
| அஞ்ஞாதவாசம் :~ | 1995 இடப்பெயர்வு முதல் 1998.06.16 மீளக்குடியேறும் வரை |
| சோதனை :~ | '95 இடப்பெயர்வும் தலைமறைவும் |
| சாதனை :~ | மீள ஆரம்பித்து சில மாதத்திலேயே நாட்டிலேயே பெரிய ரோட்டறக்ட் கழகமாக உருவெடுத்தமை |
| வேதனை :~ | குடியிருக்க நிரந்தர வீடின்மை |
| போதனை :~ | சேவையே வாழ்க்கை (Service above self) |
| அங்கங்களின் தொகை :~ | 47 |
| முகவரி :~ | நிரந்தரமல்ல |
| பலம் :~ | உறுப்பினர் ஒற்றுமை |
| பலவீனம் :~ | நிதிநிலைமை |
| மகிழ்ச்சி :~ | 1998ன் நடுப் பகுதியில் மீள் ஆரம்பம் (உதயன் பணிமனை) |
| நண்பர்கள் :~ | அனைவரும் |
| எதிரிகள் :~ | எவரையும் அப்படி நினைப்பதில்லை |
| இலட்சியம் :~ | சர்வதேச விருது பெறல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்றிட்ட அறிக்கை
# (98/ 99)

எமது கழகம் ஏறக்குறைய மூன்று வருடங்களின் அஞ்ஞாதவாசத்தின் பின் மீள ஆரம்பிக்கப்பட்டபோது குடாநாட்டு மக்களிடையே கழகத்தின் அறிமுகம் பெருமளவு அற்றுப்போயிருந்தது. மேலும் முற்றிலும் புதிய உறுப்பினர்களே கழகத்திலிருந்தமையால் ஆரம்பத்தில் கழக செயற்பாடுகள் வேகம் குறைந்தே காணப்பட்டன. ஆனபோதும் குறுகிய காலத்திலேயே பாரிய செயற்திட்டங்கள் தீட்டப்பட்டு அவற்றுட்பல வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன. எமது கழக நீண்டகால உறுப்பினரான Rtr. A. முரளிதரன் தலைமையில் கழகம் சீரான கட்டுக்கோப்புடன் எமது பிரதேச மக்களிற்கு பெரும் தொண்டாற்றியது.

## 01) உயிர்காப்பு நிதிசேகரிப்பு

அலெக்சாண்டர் சாம்ராட் எனும் 17வயது ஏழை இளைஞனின் இதயத்தில் துவாரம் உள்ளதாகவும் உடனே சத்திரசிகிச்சை தேவை, அதற்கு 5 இலட்சம் ரூபா தேவைப்படுமென வைத்தியர்கள் கூறிய போது அவரின் பெற்றோர் யாழ் றோட்டரிக் கழகத்தினரிடம் உதவி நாடினர். றோட்டரி கழகம் உடனடியாக ஓர் உயிர்காப்பு நிதி சேகரிப்புத் திட்டமொன்றை அமுல்படுத்தியது. இத்திட்டம் பரந்தளவில் நடத்தப்படவேண்டுமென்பதால் எமது கழகமும் அத்திட்டத்தில் இணைந்து கொண்டது. கழகம் மீள ஆரம்பித்து சொற்ப காலமே ஆகியிருந்த நிலையில் எமது முதல் திட்டமே ஓர் அரிய சேவைத் திட்டமாக அமைந்தது, எம் உறுப்பினரிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியதுடன் எமது கழக செயற்பாட்டையும் அதன் தேவையும் கழகத்திற்கு உணர்த்தியது.

இத்திட்டத்தில் சுன்னாகம் றோட்டரக்ட் கழகமும் இணைந்து பங்கு கொண்டது. இத்திட்டத்தின் மூலம் எமதுகழகத்தால் ரூ.50,000/- இற்குமதிகமான தொகை சேகரிக்கப்பட்டு றோட்டரிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்திற்கு Rtr. அனுராஜ் செயற்திட்ட இயக்குனராக பணியாற்றினார்.

இத்திட்டத்திற்கு காரணமான இளைஞர் சாம்ராட் தற்போது சத்திரசிகிச்சை முடிந்து நலமாக உள்ளார் என்பது எமது முதல் திட்டத்திற்கு கிடைத்த பெருவெற்றி என்பதுடன் உறுப்பினர்களின் சேவை உணர்விற்கு கிடைத்த ஆத்ம திருப்தியுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும், இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பாடசாலை மட்டங்களிலும் நிதி சேகரிக்கப்பட்டது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதியில் சில பாடசாலைகளிலிருந்து இன்னமும் நிதி பெறப்படாமலிருப்பதால் இத்திட்டம் இன்னமும் முழுமையாக பூர்த்தியடையவில்லை.

(இச்செயற்திட்டத்தின் முதற்கட்ட நிதி சேகரிப்பில் பெற்ற அனுபவங்கள் இச்சஞ்சிகையில் "முதல் திட்டத்தில் முகிழ்ந்திட்ட நினைவலைகள்" எனும் தலைப்பின் கீழ் பிரசுரமாகியுள்ளது)

## 02. இன்னிசை நிகழ்ச்சி

கழகம் மீள ஆரம்பிக்கப்பட்டு சிறிதுகாலமே ஆகியிருக்கையில் தொடர்ந்து சேவை திட்டங்களை செயற்படுத்த கழகத்திற்கு நிதி தேவைப்பட்டது. எனவே கழகத்திற்கு நிதிதிரட்டும் முகமாக ஓர் இன்னிசை நிகழ்ச்சி நடாத்த தீர்மானிக்கப்பட்டது. மேலும் வளரும் இளம் கலைஞர்களிற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நோக்கோடு முற்றிலும் புதிய இளம் கலைஞர்களால் உருவான "காஞ்சனா" இசைக் குழுவினருக்கு அச்சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. எமது கழகத்திற்கு நிதி சேகரிக்கும் அதேவேளை புதிய கலைஞர்களை மக்களிடையே முதன்முதலாக மேடையேற்றியதன்மூலம் அவர்களை சமூகத்திற்கு இனங்காட்டி அவர்களிற்கு நல்லதோர் எதிர்காலம் அமையவும் இத்திட்டம் வழி சமைத்தது.

98ம் ஆண்டு தை மாதம் 2ம், 3ம் திகதிகளில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இருநாள் நிகழ்ச்சியாக இத்திட்டம் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்டமை, எமது கழகத்தை மக்களிடையே பிரபல்யப்படுத்தியது. ஆனபோதும் எதிர்பார்த்த இலக்கை இத்திட்டம் எட்டவில்லை.

இச்செயற்திட்டத்திற்கு பொறுப்பாக Rtr. S. அனுராஜ் கடமையாற்றினார். கழக உறுப்பினர்களனைவரும் முழுமூச்சாக இத்திட்டத்தில் பங்கு கொண்டனர். எதிர்காலத்தில் இதைவிடப் பாரிய திட்டங்களை செயற்படுத்த தேவையான தற்துணிவை உறுப்பினர்கள் பெற இத்திட்டம் உதவியது.

## 03. "வாழ்வகம்" வளாக சிரமதானம்

மானிப்பாயில் அமைந்துள்ள வாழ்வகம் எனப்படும் விழிப்புல வலுவிழந்தோர் பராமரிப்பு நிலையத்தின் வளாகத்தை சிரமதானம் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்து அங்கு சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள் Rtr J.W. கெல்வின் தலைமையில் சிரமதானத்தில் ஈடுபட்டனர். பணியின் முடிவில் அங்கு தங்கியிருக்கும் பார்வையற்ற வர்களுடன் ஆடல் பாடல் களியாட்டங்களில் ஈடுபட்டனர். ஒரு தினத்தை முழுமையாக அவர்களுடன் பகிர்ந்து கொண்டபின் உறுப்பினர்கள் கழகம் திரும்பினர்.

## 04. 7ம் ஆண்டு நிறைவு விழா

கழகத்தின் 7ம் ஆண்டு நிறைவு விழா 1998.01.16 அன்று திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய சிறுவர் இல்லத்தில் Rtr.J.W. கெல்வினின் நெறிப்படுத்தலில் இடம் பெற்றது. இல்லச் சிறார்களுடன் கழக உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து விளையாடினர். சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. உறுப்பினர்களால் சிறுவர்களிற்கு சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன.

## 05. தலைமைத்துவப் பயிற்சி

யாழ் மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த இன்ரறக்ட் கழக உறுப்பினர்களிற்காக எமது கழகத்தால் தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கச்சேரியடியில் Y.M.C.A மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு, அது சார்பான வல்லுனர்கள் எம்மால் அழைக்கப்பட்டு விரிவுரைகளை ஆற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. கருத்தரங்கின் முடிவில் கலந்து கொண்ட மாணவர்களிற்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இச் செயற்றிட்டத்திற்கு Rtr. M.பிரதீப் இயக்குனராக கடமையாற்றினார்.

## 06. பட்டி மண்டபச் சுற்றுப்போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகளிடையே மேற்படி போட்டிக்கு எம்மால் விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பித்த பாடசாலைகளிற்கிடையே யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரியில் ஒரு வாரகாலமாக இச் சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டது. தகுதிவாய்ந்த நடுவர்கள் இதை நடாத்த அழைக்கப்பட்டனர். இச்செயற்திட்டத்திற்கு Rtr. P. வானதி இயக்குனராகவிருந்து வழி நடத்தினார். சுற்றுப்போட்டி முடிவில் 1ம், 2ம் இடங்களை பெற்றுக்கொண்ட பாடசாலைகளிற்கு எமது கழகத்தின் சுழல் கேடயங்கள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ் குடாநாட்டு மகளிர் கற்கும் பாடசாலைகளிற்கிடையே விண்ணப்பம் கோரப்பட்டு மேற்படி சுற்றுப்போட்டி நடாத்தப்பட்டது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இச்சுற்றுப்போட்டி திறமையான நடுவர்களால் இரு வாரகாலமாக நடாத்தப்பட்டன. முடிவில் வெற்றி யீட்டிய அணிகளிற்கு எமது கழகத்தின் சுழல் கேடயங்கள் வழங்கப் பட்டது. இச்செயற்திட்டத்திற்கு Rtr S. திருவேணி இயக்குனராக கடமையாற்றினார்.

## 08. மைதானம் அமைப்பு

"சுகவாழ்வு" நிலையத்தினரால் சிறுவர்களின் உள விருத்திக் காக செயற்படுத்தப்படும் ஓர் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக அவர் களின் விளையாட்டு ஈடுபாட்டை அதிகரிக்க அதற்கென ஓர் மைதானம் தேவைப்பட்டது. இதனையடுத்து அந்நிலையத்தின் அருகில் நீண்ட காலமாக பராமரிப்பு அற்று பற்றை காடாக காணப்பட்ட கொண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய தெற்குப்புற காணி ஒன்றை மைதானமாக மாற்ற சுகவாழ்வு நிலையத்தினர் முடிவுசெய்து அதற்கு எமது உதவியை நாடினர்.

அதற்கமைய எமது கழக உறுப்பினர்கள் அங்கு சென்று ஒரு முழுநாள் வேலைத்திட்டமாக மைதான உருவாக்கத்தில் ஈடுபட்டனர். Rtr M. பிரதீப் தலைமையில் பணியில் ஈடுபட்ட உறுப்பினர்கள் நிறைவாக மைதானத்தின் வாயிலில் பெயர் பலகையையும் நாட்டினர்.

(குறிப்பு- 98/99 காலப்பகுதியில் இடம்பெற்ற செயற்றிட்டங்கள் தொடர் பான அறிக்கைகள் எதுவும் கிடைக்கப் பெறாமையால் அக்காலப் பகுதிகளில் இடம்பெற்ற மேற்படி செயற்திட்டங்கள் தொடர்பான முழு-மையான விபரங்கள் இங்கு இடம் பெறவில்லை)

**Rtr ஜெ. பிரதீபன்**
**Rtr. ம. பிரதீப்**

பிறர் குற்றங்களைக் கண்டு தண்டிக்கு முன்
உன்னிடமுள்ள பாரிய குற்றங்களைக் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்திட்ட அறிக்கை

# 1999 / 2000

1999 ஜூலை மாதம் முதல் Rtr. சி. அனுராஜ் தலைமையில் புதிய செயற்குழு அமைக்கப்பட்டதின் பின் புத்தாயிரம் ஆண்டு பிறப்பு வரையான காலப்பகுதிகளில் எமது கழகத்தால் 5 பிரதான செயற்றிட்டங்கள் உட்பட பல செயற்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப் பட்டுள்ளன. மேலும் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டுள்ளன.

## நிறைவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் பற்றிய விபரம்

### 01. சிரமதானம்

திருநெல்வேலி சைவ வித்யா அபிவிருத்தி சங்க சிறுவர் இல்ல வளாகத்தில் மழைகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சிறுவர்களின் நடமாட்டத்திற்கு இடையூறாக இருப்பதாகவும் இல்லத்திற்கு போக்குவரத்தில் சிரமம் இருப்பதாகவும் தெரிய வந்ததையடுத்து 14.09.99 அன்று கழக உறுப்பினர்களால் அங்கு ஓர் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. Rtr.J.W.கெல்வின் செயற்றிட்ட இயக்குனராக பொறுப்பேற்று சிரமதானத்தை ஒழுங்கமைத்தார்.

இல்லக் கட்டடத்திலிருந்து வளாக முகப்பு வரை உறுப்பினர்களால் மண்பாதை போடப்பட்டது. அன்றைய தினம் பணி முடிவடையாததால் 21.09.99 அன்று இரண்டாம் கட்டமாக சிரமதானம் தொடரப்பட்டு திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.

### 02. பிரச்சாரம்

முதியோர்தின விழாவையொட்டி முதியோரை மதித்தல் பேணுதல் சம்மந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு "சுகவாழ்வு" நிலையத்தினருடன் சேர்ந்து எமது கழகம் யாழ் நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டும் திட்டமொன்றை செயற்படுத்தியது "சுகவாழ்வு" நிலையத்தினரால் அச்சடிக்கப்பட்ட சுவரொட்டிக்களை பொறுப்பேற்றுக் கொண்ட கழகம் 11.10.99 அன்று Rtr பா. உமாகணேசன் வழிநடத்தலில் திட்டத்தை செயற்படுத்தியது. இச்செயற்திட்டத்தை நடைமுறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகையில் உறுப்பினர்கள் சிலர் இராணுவத்தினரின் சந்தேக பார்வைக்கு இலக்கான போதும் திட்டம் பூரணத்துவமாக செயற்படுத் தப்பட்டது.

## 03. பரீட்சை

2000 ஆண்டு முதல் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை களில் பொதுஅறிவு ஒரு கட்டாய பாடமாக அரசாங்கத்தால் அறிவிக் கப்பட்டது. மேலும் தற்காலத்தில் பொது அறிவு நுண்ணறிவு சம்பந்த மான துறைகளின் அவசியம் அதிகமாக உணரப்படுகிறது இதனை யடுத்து எமது பிரதேச மாணவர்களின் பொதுஅறிவு வளர்ச்சிக்காக அது சம்பந்தமான தேடலை அவர்களிடையே ஏற்படுத்த வேண்டுமென எமது கழகம் முடிவுசெய்தது. எனவே பொது அறிவு நுண்ணறிவு தேடலிற்கான பரீட்சை ஒன்றை குடாநாட்டு பாடசாலைகள் மட்டத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்திற்கு இயக்குனராக Rtr. ஜெ. தாரிணி பொறுப்பேற்று கொண்டு திட்டத்தை நெறிப்படுத்தினார். இது ஓர் பாரிய செயற்றிட்டமாகையால் உதவி இயக்குனராக Rtr. ஜெ. பிரதீபன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளிற்கும் கழக உறுப்பினர் களால் தயாரித்து அச்சிட்ட விண்ணப்பத்திரங்கள் விநியோகிக்கப் பட்டன. குறித்த காலப்பகுதிக்குள் விடையளிக்குமாறு கோரப்பட்டது அதன்படி சிறிது காலத்தின் பின் விடைத்தாள்கள் சேகரிக்கப்பட்டு திருத்தப்பட்டு பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் பெருமளவு மாணவர்களிற்கு வழங்கப்பட்டது.

11.10.99 அன்று ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டம் 19. 11. 99 அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவுடன் நிறைவுக்கு வந்தது. 5 வாரங்களிற்கு மேலாக தொடர்ச்சியாக இச்செயற்திட்டம் செயற்படுத் தப்பட்டு திட்டத்தின் இலக்கை எட்டியது. இத்திட்டத்தின் மூலம் கழகத்திற்கு கணிசமான தொகை இலாபமாக கிடைக்கப்பெற்றது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

### பரிசளிப்பு விழா

எமது கழகத்தால் நடாத்தப்பட்ட பொது அறிவு நுண்ணறிவு தேடலிற்கான பரீட்சை செயற்திட்டத்தின் நிறைவம்சமாக அப்பரீட்சை யில் சித்தியடைந்த மாணவர்களிற்கு சான்றிதழ்களும் பரிசும் வழங் கும் முகமாக 19.11.99 அன்று கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அருண்ஸ் கட்டட தொகுதியின் 3ம் மாடியில் ஓர் பரிசளிப்பு விழாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தியது. பல்வேறு பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி நூற்றுக்கணக்கான மாணவர்கள் விழாவிற்கு வந்திருந்தனர். கழகத் தலைவரால் மாணவர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

குறிப்பு : மேற்படி செயற்திட்டத்தின் போது மாணவர்களிற்கு வழங்கப்பட்ட பரீட்சை வினாத்தாளின் வினாக்களும் விடைகளும் அச்சாணியின் பிறிதொரு பக்கத்தில் "உங்கள் அறிவிற்கு" எனும் தலைப்பின் கீழ் பிரசுரமாகியுள்ளது.

## 04. சுத்திகரிப்பு

05.11.99 அன்று கழக உறுப்பினர்கள் மானிப்பாய் வாழ்வகம் இல்லத்தில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டனர். வாழ்வகம் இல்லம் என்பது பார்வையற்றோரை பராமரிக்கும் ஓர் நிலையமாகும். இவ் இல்ல வளாகத்தில் ஏற்கனவே எமது கழகம் சிரமதானப்பணியொன்றில் ஈடுபட்டிருந்தமை நினைவு கூரத்தக்கது. இச்சுத்திகரிப்பு செயற்திட்டத்திற்கு Rtr. இ. ஐங்கரன் தலைமை வகித்தார்.

## 05. சுற்றுலா

கழக உறுப்பினர்களின் சுற்றுச் சூழல் பற்றிய அறிவு விருத்திக்காகவும் சமூகத்தின் பரந்துபட்ட மனிதர்களுடனான புரிந்துணர்விற்கும் உல்லாச அனுபவத்திற்குமாக கழகத்தால் ஓர் சுற்றுலா பயணத் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. 09.12.99 அன்று சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டத்திற்கு இயக்குனராக Rtr. ஜெ.பிரதீபன் பொறுப்பேற்று சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டார். சுற்றுலாவிற்கான செலவினைக் கழகம் பொறுப்பேற்றது. இப்பயணத் திட்டத்தில் குடாநாட்டில் அமைந்துள்ள சில சிறு தொழிலகங்கள் பார்வையிடப்பட்டன. வதிரி தோற்பொருள் உற்பத்திக்கூடம், திக்கம் வடிசாராய உற்பத்தி நிலையம், இணுவில் லோகேஸ் சீமெந்துக் கூரை தயாரிப்பு நிலையம் போன்ற தொழிலகங்களிற்கும் மணற்காட்டுக் கடற்கரைப் பிரதேசம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம் போன்ற இடங்களிற்கும் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சில புதிய உறுப்பினர்களும் கழகத்தில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி செயற்திட்டங்கள் தவிர வேறு பல சிறு செயற்திட்டங்களும் கழக உறுப்பினர்களால் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் எமது கழக விளையாட்டுக் பிரிவின் துடுப்பாட்ட குழு பல சிநேகபூர்வ ஆட்டங்களில் பங்குகொண்டு வெற்றியீட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கழகத்தினால் உடனடியாக நடைமுறைப்படுத்தப் படவுள்ள - நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டுள்ள செயற்றிட்டங்கள் -**

1) பட்டிமண்டபச் சுற்றுப்போட்டி
2) பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி
3) வினாடிவினாப் போட்டி ( திறந்தநிலை)
4) மானிப்பாய் வாழ்வக விழிப்புலனற்றோருக்கு கற்கும் பாடங்களை ஒலிப்பதிவு செய்து வழங்கல்
5) வீதிப் போக்குவரத்துப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தல்
6) வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி
7) கம்பனி அமைப்பு

Rtr. P. வானதி

- றோட்டரக்ட் கழக நோக்கம் :
இளைஞர்கள் தம் திறமையையும் சுய அபிவிருத்தியையும் விருத்தி செய்து கொள்வதுடன் நட்பும் சேவையும் உட்பட்ட ஓர் எல்லைக்குள் அகில உலக மக்களுடன் தொடர்பு கொண்டு தமது சமூக மேம்பாட்டிற்காய் உழைத்தல்.

- உலக றோட்டரக்ட் தினம் : 13 மார்ச்

- றோட்டரக்ட் கழகத்தில் சேர்வதற்கான வயது எல்லை 18 – 30 ஆகும். (யூன் 30 அன்று 30 வயது அடையின் அங்கத்துவம் முடிவடையும்)

- ஒரு றோட்டரக்ட் கழகம் வருடாந்தம் அதன் தலைமையகத்துக்குச் செலுத்த வேண்டிய சந்தாப் பணம் 20 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

- றோட்டரக்டின் கொள்கை
Fellowship through Service
(நட்பினூடே சேவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் திட்டத்தில்......

## முகிழ்ந்திட்ட நினைவலைகள்

## ஓர் அனுபவம் !

அலெக்சாண்டர் சாம்ராட் என்ற 17வயது இளைஞனின் இருதய சத்திர சிகிச்சைக்காக தேவைப்பட்ட 5 லட்சம் ரூபா நிதியில் ஒரு பகுதியை எமது கழகம் மூலம் சேகரித்துக் கொடுப்பது என முடிவு செய்தோம். எமது கழகம் மீள ஆரம்பித்த பின்னர் முதலாவது சேவைத் திட்டமாக இவ் உயிர்காப்பு நிதி சேகரிப்புத் திட்டத்தை ஆரம்பித்தோம். திட்டத்தின் ஒரு பகுதியாக சாவகச்சேரி சென்று நிதி சேகரிப்பது என செயற்குழு தீர்மானித்தது. எமது முதலாவது குழு நிலை செயற்பாட்டில் எமக்கு ஏற்பட்ட அனுபவங்களை இங்கு பகிர்ந்து கொள்கிறோம்.

- ஜேனா.

09.12.1998 அன்று காலை 7.30 மணியளவில் யாழ் பேருந்துத் தரிப்பு நிலையத்தில் எமது உறுப்பினர்கள் எண்மர் பல்வேறு திசைகளில் இருந்தும், வந்து ஒன்று கூடினோம். துவிச்சக்கர வண்டிகளைப் பாதுகாப்பு நிலையத்தில் ஒப்படைத்து விட்டு மூன்று துவிச்சக்கர வண்டிகளை மட்டும் எடுத்துக் கொண்டு எண்மரும் அந்தச்சிறிய "மினிவான்" எனப்படும் "மினி" வாகனத்தில் ஏறினோம். பல்வேறுபட்ட மக்களின் பல்வேறுபட்ட ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் சுமந்தவாறு வாகனம் புறப்பட்டது.

பயணத்தூரத்தின் பாதியைக் கடக்கு முன்னரே சனநெருக்கடி அதிகரிக்க நடத்துனர் "பின்னால் போ, பின்னால் போ" எனக் கத்த ஆரம்பித்தார். ஒரு நிலையில் பொறுமையிழந்த எமது உறுப்பினர்கள் சிலர் வாகனத்தின் பின் கதவைத் திறந்து வெளியேறி முன் கதவுப் பக்கம் வந்து "இனி எங்கு போவது" என நடத்துனரிடம் கேட்ட போது நடத்துனர் அதிர்ந்து போய் நின்றார். இப்படியாகப் பல அனுபவங்களுடன் வாகனம் சாவகச்சேரி தரிப்பு நிலையத்தை அடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு எமக்காகக் காத்திருந்த நண்பர் ஒருவரின் உதவியினால் மேலதிகமாக சில துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொண்டு ஒன்பது பேராக எமது வேலைத்திட்டத்தை 8.30 மணியளவில் ஆரம்பித்தோம்.

திட்டத்தின் முதல் அம்சமாக சிப்பாயுடனான சந்திப்பு அமைந்தது. இத் திட்டத்திற்கென பிரத்தியேகமாக தயாரித்து அணிந்திருந்த சின்னத்தைக் கண்டு சந்தேகம் கொண்ட சிப்பாய் ஒருவரிற்கு எமது உறுப்பினர்களில் ஒருவர் ஆங்கிலத்தில் விளக்கமளிக்க அவர் சமாதானம் அடைந்து சென்றார். இந்த ஆரம்பத்தையே நல்ல சகுனமாகக் கொண்டு, எம்மை நான்கு அணிகளாக்கி நகரின் நான்கு திசைகளிலும் பிரிந்து நிதி சேர்ப்பது எனத் தீர்மானித்தோம்.

ஆரம்பத்தில் எல்லா அணியினருக்கும் ஒரேவித அனுபவங்களே ஏற்பட்டது. "ஆம்" "முதலாளி இல்லை" "அப்புறம் வாங்க" என்ற பதில்களே அடுத்தடுத்துக் கிடைத்தன. கடை திறந்து முதலாட்களாக நாம் நுழைந்ததால் பல முதலாளிகள் சிணுங் கொண்டனர். இவற்றின் காரணமாக வசூல் மந்தமாகவே நகர்ந்தது. எமது திட்டப்படி 10.00 மணியளவில் எமது முதற் கட்டத்தைப் பூர்த்தி செய்து கொண்டு முன்னர் குறிப்பிட்டவாறு ஒரு இடத்தில் ஒன்று சேர்ந்தோம். நிலைமையைக் கூடி ஆராய்ந்து நகரில் வியாபாரம் களை கட்ட ஆரம்பித்த பின் வசூலிற்குச் செல்வதெனத் தீர்மானித்தோம். அதற்கிடையில் எமது காலை ஆகாரத்தை அருந்த எண்ணி தேநீர்ச்சாலை ஒன்றில் நுழைந்து காலையுணவாக தலா ஒரு குவளை தேநீரை அருந்தினோம். பின் மீண்டும் 10.30 மணியளவில் நாம் மூன்று குழுக்களாக பிரிந்து திட்டத்தைத் தொடர்ந்தோம்.

இரண்டாம் கட்ட நடவடிக்கை திருப்திகரமாக இடம்பெற்றது. சில இடங்களில் தொடுக்கப்பட்ட சந்தேகங்களால் எம் உறுப்பினர்கள் சிலர் மனமுடைந்து போனார்கள். ஒரு கடையில் முதலாளி 20/- ரூபா தந்த பின் அங்கு வேலை செய்பவர்களிடம் தனிப்பட்ட உதவிகளையும் இங்கு செலுத்தலாம் என நாம் கூற அவர்கள் தலா 50 ரூபாவைத் தந்த போது அவர்களின் மனிதாபிமானத்தை கண்டு நெகிழ்ந்து போனோம்.

கடைகளில் சேகரிப்பை முடித்துக் கொண்டு அயலில் உள்ள வீடுகளிற்கு சென்ற ஒரு அணிக்கு ஒரு வீட்டில் வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது. 5 வயதுக்குட்பட்ட நான்கு குழந்தைகள் ஒட்டிய வயிற்றுடன் திண்ணையில் தவழ மூலையில் சோக வதனத்துடன் ஒரு தாய். அண்மையில் தான் அப்பிள்ளைகளின் தந்தையைக் கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து சென்றார்களாம். இன்றுவரை தகவலில்லை என்ற தகவலை நாமறிந்தபோது உதவி கேட்டுச் சென்ற எம்மிடையேயே அவர்கள் உதவி கேட்பது போலிருந்தது. தற்சமயம் எதுவும் அவர்களிடம் கேட்காது விடுவதே அப்போது அவர்களுக்கு எம்மால் செய்யக் கூடிய உதவியாகையால் எதுவும் பேசாது திரும்பினோம்.

நகரின் மையப் பகுதியில் களமிறங்கிய எமது அணி மையப் பகுதிக் கடைகளில் வசூலை முடித்துக் கொண்டு சந்தைக்குள் தரை-யிறங்கியது. அதில் பெருமளவு நிதி சேராதபோதும் சோராது போராடி அதைத் தொடர்ந்து இறைச்சிக் கடைகளுக்குச் சென்று பின் மீன் சந்தைக்குள் ஊடுருவியது அதே சமயம் மற்றோர் அணி வெற்றிலைக் கடைகளுக்குள் ஊடுருவியது. மீன் சந்தைக்குள் நுழைந்த அணிக்கு பலத்த வரவேற்புக் கிடைத்தது. "வியாபாரம் முடிய வா" என்று. ஆனாலும் தளராமல், வியாபாரத்திலீடுபட்ட ஆச்சிகளுடனும் அம்மாக்களுடனும் ஐயாக்களுடன் கூட இருந்து விளக்கமளித்து நிதியை வசூலித்துக் கொண்டு சந்தையை விட்டு வெளியேறியபோது கையில் 400 ரூபா பெறுமதியான தாள்களில் இருந்து மீன்களின் வாசம் கமகமத்துப் பசியைத் தூண்ட ஆரம்பித்தது.

சந்தையை விட்டு வெளியேறிய அணி அருகிலிருந்த கடைகளிலும் வசூலிக்கச் சென்றது. ஒரு தையல் கடையில் மூன்று தையல்கள் மட்டும் இருந்தனர். உடன் எமது மூன்று உறுப்பினர்கள் சென்று தனித்தனியே அவர்களுக்கு விளக்கம் கொடுத்து நிதியை வசூலித்தனர். தொடர்ந்து பேருந்துத்தரிப்பு நிலையத்துள் புகுந்து அங்கு நின்ற பேருந்துகளில் ஏறி வசூலை மேற்கொண்டனர். தரிப்பு நிலை-யத்தை விட்டு வெளியேறுகையில் 3 தையல்களில் இருவர் எம்மை நோக்கி வந்து "இந்தப் புத்தகங்களை கடையில் விட்டுட்டு வந்திட்-டீங்க" என்று சிட்டைப் புத்தகங்களைத் தந்தபோது அவற்றை விட்டு விட்டு வந்த உறுப்பினர் நன்றி கலந்த பார்வையோடு அசடுவழிந்தார்.

ஏனெனில் இதற்கு முன்பும் இரு தடவை வேறு கடைகளில் அவர் இவ்வாறு மறந்து போய் விட்டுவிட்டுவர கடைக்காரர்களே அழைத்துக் கொடுத்திருந்தனர்.

மீண்டும் ஒன்று சேர்ந்த மூன்று அணிகளும் இரண்டாகப்பிரிந்து வங்கிகளுக்கும் அரசநிர்வாக அலுவலகங்களிற்கும் சென்றோம். எமது அணிகள் களமிறங்கிய இடங்களிலெல்லாம் சம்மந்தப்பட்டவர்களை மட்டுமன்றி அங்கு வந்தவர்கள், இருந்தவர்கள், போகின்றவர்கள் அனைவரிடமும் எமது வசூல் திட்டத்தை மேற்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுச் சாலைகளில் உணவருந்த வந்தவர்களையும் வங்கி வாடிக்கையாளர்களையும், மதுபானசாலைக்கு வரும் "குடி" மக்களையும்கூட நாம் தவற விடவில்லை. இவ்வாறாக நகரின் முழுப்பகுதியிலும் எமது திட்டத்தை முடித்த பின் மதியம் 1.30 மணியளவில் மதிய உணவிற்காக கடையில் உணவைப் பெற்றுக் கொண்டு நண்பரின் வீட்டிற்குச் சென்றோம்.

மதிய போசனத்தின் பின் அணியினர் புத்துணர்ச்சி பெறும் நோக்குடன் பெருங்குளம் பிள்ளையார் கோயில் கேணியில் தீர்த்தமாடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. சில உறுப்பினர்கள் கரையிலிருந்து நீச்சல் கற்றுக் கொடுக்க ஏனையோர் நீரில் நீந்தலாயினர். அவ் வேளை ஒரு உறுப்பினர் நீருக்கடியில் ஆராய்ச்சி செய்யும் நோக்குடனோ என்னவோ நீருள் இருமுறை முக்குளித்து மூன்றாம் முறையும் முக்குளிக்க ஆரம்பிக்கையில் சக உறுப்பினர்களால் கரையேற்றப் பட்டார்.

நீச்சல் முடிந்து மீண்டும் நிதி சேகரிக்கும் பொருட்டு சில உறுப்பினர்கள் தங்கள் தெரிந்தவர் வீடுகளுக்குச் சென்றனர். அவ்வாறு சென்ற இரு உறுப்பினர்கள் சீருடையினர் சிலரின் அன்பான உபசரிப்பிற்கிணங்கி அவர்களின் கௌரவ விருந்தினராக 45 நிமிடம் இருந்து பின், பிரிய மனமின்றி வந்து சேர்ந்தனர்.

எமது முதலாவது குழு நிலைத்திட்டமாகிய இது, நாம் எதிர்பார்த்த இலக்கை நிறைவேற்றியது. எமது தொடரப் போகும் திட்டங்களிற்கு உற்சாகத்தை ஊட்டும் நிகழ்வாக அமைந்தது. இந்த ஒரு நாள் திட்டத்தில் ரூ. 10000/- அளவில் நிதி சேகரிக்கப்பட்டது. இந்தச் சேகரிப்பின் மூலம் நாம் கண்ட உண்மை என்னவெனில் வளமுள்ளவர்களைக் காட்டிலும் மனமுள்ளவர்களிடமே அதிகளவு நிதி சேகரிக்க முடியும் என்பதாகும்.

❖ **உன்னிடம் வேலை பார்த்தவனின் வியர்வை உலர்வதற்கு முன் அவன் கூலியைக் கொடு**

❖ **சுகத்தைக் கண்டு மகிழாதே - அது துக்கத்தின் ஓர் வித அலங்காரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியோர நாணல்கள்



தொண்டுள்ளங்கள் தொட்டிலிட தொடங்கியது இக்கழகம்
கண்டு பலர் களித்திருக்க காலித்தது எக் கணமும்
பள்ளி விட்டு புறப்பட்டோர் பலமனைத்தும் ஒன்று கூட்டி
பரிதவிக்கும் மாந்தர் துயர் பணி புரிந்து போக்கியது!

சேர்ந்திளைஞர் பலர்கூடி, சோர்ந்திடாது போராடி - உளத்
தாகத்தோடு அல்லாடி, துன்பத்து(ள்)ளே நீராடி
சேவையெனும் தேரேறி, தேவைதீர்த்து சீராட
சாமிகூட தொழுது நின்றான்! பூமித்தாயும் புன்னகைத்தாள்!

வான்தாழ நாமுயர, நாம் சேவை செய்து நின்றோம்!
வந்ததோரிடப் பெயர்வால் காணும் கனவு மாயக்கண்டோம்!
ஒரு நாள் ஓட்டத்தில் ஆட்டம் கண்டது எம் கழகம்........
ஊசலாடும் உயிருடனே வாழ்ந்திருந்தது சிலவருடம் ......

மீண்டும் வந்து சிலகாலம், தேசநிலை தடுத்துவிட
வேண்டும் சேவை செய்துவிட செய்வதறியா நிற்கையிலே
ஆர்வங்கொண்ட பல விளைஞர் வேகங்கொண்டு சேர்ந்துவிட
பார்புகழும் செயல் புரிய உயிர்த்திட்டது எம் நிலையம்!

சாமரம் வீசிய காற்று சதிராடி புயலானாலும்
அருவியாய் போன ஆறு அடலேறு அள்ளும் கடலானாலும்
அணையாததீபமாய் ஒளி எங்கும் வீசும் -
இளை காணா இந்த நதியோர நாணல்கள்!!

- Rtr. தி. துஷ்யந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோட்டறக்ட் கழகம் ...........

# ஏன்! எதற்கு! எப்படி?



பாடசாலைகளை விட்டு வெளியேறியபின் உயர்கல்விக்காகவோ அல்லது வேறு வேலை வாய்ப்புக்களிற்காகவோ காத்துக் கொண்டிருக்கிறீர்களா? இவ் வேளையில் உங்கள் இளமைக்காலம் வீணாகலாமா? உங்களிற்கும் சமூகத்திற்கும் பயன்படக் கூடிய முறையில் செயல்பட முயல்கிறீர்களா? அப்படியாயின் யாதுமொரு சேவைக் கழகத்தில் இணைந்து கொள்ளுங்கள். மற்றவர்களிற்கு உதவுவதன் மூலம் உங்களை உயர்த்திக் கொள்ள அது உதவும். அதிலும் றொட்டறக்ட் கழகங்கள் 18 முதல் 30 வரையான இளையவர்களால் முற்றிலும் இயங்குவன. எனவே இத்தகைய கழகங்களுடன் இணைவதன் மூலம் இளையவர் சக்தியை ஒன்று குவித்து நல்வழிப்படுத்த இயலும்.

அருகிலே எந்தவொரு றொட்டறக்ட் கழகமும் இல்லையா? அப்படியாயின் உங்கள் பகுதி றொட்டறி கழகத்திடம் ஆலோசனை பெற்று உங்கள் பிரதேசங்களில் புதிய றோட்டறக்ட் கழகங்களை அமைத்து செயற்படுங்கள். யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையில் "யாழ்ப்பாணம் றொட்டறிக்கழகம்" என்ற ஒரு றோட்டறிக் கழகமே இயங்குகிறது. எனவே இக்கழகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் பகுதிகளில் புதிய றொட்டறக்ட் கழகங்கள் உருவாக வழி அமையுங்கள்.

18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட குறைந்த பட்சம் 15 உறுப்பினர்களைக் கொண்ட றோட்டறக்ட் கழகங்களை உங்கள் பகுதிகளில் உருவாக்குவதன், மூலம் உங்கள் பகுதிகளில் உள்ள வறுமை, சுகாதார சீர்கேடு, விழிப்புணர்வு, சமூக குடும்ப பிரச்சினைகள் ஆக்க பூர்வ நிகழ்வுகள் போன்ற பல்வேறு விடயங்களிலும் உங்கள் பங்களிப்பை வழங்க ஓர் ஊடகமாக இதை பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும். அத்துடன் சர்வதேச மட்டத்தில் தொடர்புகளும் இருப்பதால் பல சிறந்த வாய்ப்புகளும் கிடைக்க மார்க்கமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 வயதிற்கு கீழுள்ள பாடசாலை மாணவர்கள் றோட்டறக்ட் கழகத்தின் அடுத்தபடி நிலையான இன்ரறக்ட் கழகத்தில் இணை வதன் மூலம் உங்கள் சேவை நோக்கை நிறைவேற்ற முடியும். உங்கள் பாடசாலைகளில் இன்ரறக்ட் கழகம் இல்லையா? உடனேயே உங்கள் பகுதி றோட்றிக் கழகத்தையோ அல்லது றோட்டறக்ட் கழகத்தையோ தொடர்பு கொண்டு ஆலோசனை பெறுங்கள். பாட-சாலைகளில் இக்கழகம் இயங்குவதன் மூலம் பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலைக்கும் பங்காற்ற முடியும். மேலும் மாணவர் பருவத்திலேயே சிறந்த ஆளுமை தன்னம்-பிக்கை பெற உதவும்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்" என்பதற்கிணங்க சேவையின் மகத்துவம் உணர்ந்து செயற்படுவோம். அதன் மூலம் நம்மை நாமே உயர்த்திக் கொள்ள நமக்கொரு வழி கிடைக்கும்.

நன்றி

Rtr. ஜெ. தாரிணி

❖ புள்ளிவிபரம் (சர்வதேச ரீதியல்) – 1998ல்

| கழகப் பெயர் | உறுப்பினர்கள் | கழகங்கள் | நாடுகள் |
|---|---|---|---|
| றோட்டறி | 1215750 | 29750 | 157 |
| றோட்டரக்ட் | 163820 | 6472 | 139 |
| இன்ரறக்ட் | 125833 | 4775 | 112 |

❖ றோட்டரக்ட் கழகம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு ¼ நூற்றாண்டு ஆகிவிட்டது. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கழகம் கொழும்பு றோட்டரக்ட் கழகமாகும்.

❖ ஒரு றோட்டரக்ட் வருடம் என்பது யூலை 1ம் திகதியிலிருந்து அடுத்த வருடம் யூன் 30ம் திகதி வரையுமான காலப்பகுதி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமார வாழ உளமார வாழ்த்துகிறோம்
நகைகளில் ஒரு நளினம்
அதுவே திருமகளின் புதினம்
புதிய மொடல் நகைகள் ஓடருக்கு செய்துகொடுக்கப்படும்
தரமான 22 கரட் நகைகளை நம்பிக்கையுடன்
பெற்றிட



# திருமகள் ஜீவல் கிறாப்ற்

பரமேஸ்வராசந்தி,
பலாலிறோட்,
திருநெல்வேலி.

சேவைக்கழகம் ஆக்கித்தரும் மலர்
சிறப்புற என்றும் சீருடன் வாழ்த்துகிறோம்

## "இசை சாம்ராஜ்ஜியம இராஜா"
## மெலோடியஸ் மியூசிக்



303, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சாணியின் பலம் உயர
ஆசிகூறி வாழ்த்துகிறோம்

விரும்பியதை விரும்பியபடி தைத்துப்பெற

**சுரேன் தையலகம்**



123, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.

our heartiest blessings for the eighth
Annual Celebration
of
JAFFNA MID TOWN
ROTARACT CLUB



**HARY 'S INSTITUTE**

**KONDAVIL EAST**
**KONDAVIL**

**Spoken English with Grammar**
**and Advance English By**
*M.A. HARY*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சாணி உயர அன்போடு வாழ்த்துகிறோம்

'மென்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கும் எழிலூட்டும்'

# சிறீ அமலா நகை மாளிகை

(தங்கப்பவுண் நகை வியாபாரம்)

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சாணி சிறப்புற வாழ்த்துகிறோம்

# சானுகா ஜுவல்லர்ஸ்

'அழகு நகைகளின் அரங்கம்
சானுகா'

200G, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சாணியின் உறுதி
புத்தாண்டிலும் தொடர வாழ்த்துகின்றோம்

படங்களின் பாதுகாவலன்

# பட்டாபி படமாடம்

விரும்பிய அளவுகளில் விரும்பிய வடிவினில்
படங்களை மாடம் செய்யும் கலையகம்

64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



அச்சாணி மலர அன்போடு வாழ்த்துகிறோம்

தரமான போட்டோஸ்ரற் பிரதிகள்
அடையாள அட்டைப் பிரதிகள் கவரிடுதல்
60 வருட றைக்கிளினர்ஸ்
இம் மூன்றும் இணைந்த சேவைகளை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

# சன்லைற் றைக்கிளினர்ஸ்

பஸ்நிலையம் யாழ்ப்பாணம்

கிளைகள்

கண்ணன் கொமினிகேசன்

கச்சேரியடி யாழ்ப்பாணம்

சன்லைற் மல்ரி சேவிஸ்

கச்சேரியடி யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கு அழகு சேர்க்கும் 22 கரட் தங்க வைர நகைகளை
உறுதியுடனும் உத்தரவாதத்துடனும் பெற்றிட

# SARANGA NAGAI MAADAM

**GOLD & JEWEL MERCHANTS**

HEAD OFFICE
ARUL MURUGAN NAGAI AKAM,
96/1, KASTHURIAR ROAD.

BRANCH
SIVA NAGAI MAADAM
JAFFNA ROAD,
CHAVAKACHCHERI.

177/4, KASTHURIAR ROAD
JAFFNA.
TEL. NO: & FAX 2480

- நிழல் பிரதிகள், ஒளிப்பதிவுநாடாக்கள் பெற்றுக்கொள்ள
- உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புகளை சகாய கட்டணத்தில் பெற
- தொலைநகல் வசதிக்கு
- வீட்டிலிருந்தே அழைப்புக்களை அறிந்துகொள்ள

# வேணுகா தொலைத்தொடர்பு நிலையம்

உள்நாடு **021 - 2541, 021 - 2845**
வெளிநாடு **0094 - 21 - 2541, 0094 - 21 - 2845**

நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்களின் நண்பன் யாழ் நகர் மைய
றோட்டறக்ட் கழகம் 2000ம் ஆண்டில்
புதுப் பொலிவு பெற்று வளர, புதிய நூற்றாண்டில்
'அச்சாணி' மலர வாழத்துகின்றோம்.**

**இந்திய முறைப்படி தயாராகும்**

# வேல் மிக்சர்

25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவமுள்ளவர்களின்
கைவண்ணத்தில் உருவான

மிக்சர், நெய்பூந்தி, பூந்திலட்டு, மைசூர்பாகு, பகோடா,
காராச்சேவ், கேக், ஆகியவற்றை தரமான முறையில்
தயாரித்து வழங்குபவர்கள்.

வைபவங்களுக்குத் தேவையானவற்றை
முன்கூட்டியே ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

✳ உற்பத்தி நிலையம்

வேல் மிக்சர்
குளப்பிட்டி வீதி,
கொக்குவில்.

✳ விற்பனை நிலையம்

வேல் மிக்சர்
960, நாச்சிமார் கோவிலடி
கே.கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

உரிமையாளர் :- K. பார்த்தீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலமதில் அச்சாணி - அரண் என
உயர்கவென வாழ்த்துகின்றோம்!



# லிங்கன் கிறீம் ஹவுஸ்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

❋❋ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
❋❋சொக்லெட் ஐஸ்கிறீம்



❋நட்ஸ் ஐஸ்கிறீம்
❋புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- வெனிலா ஐஸ்கிறீம்



- மட்டன் றோல்
- மிக்ஸர்
- பட்டர்கேக் வகைகள்
- லட்டு
- மஸ்கட்
- ஸ்பெஷல் பீடா
- அங்கர் பட்டர்

# LINGAN CREAM HOUSE



199, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்
இதயங்களை
வசங்கொண்ட நிலையம்



கணபதி ஸ்ரோஸ்

40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆடையகங்களின் ராணி

மகாராணி



MAHARANY TEX TILE

*NO, 50 GRAND BAZAAR*
*JAFFNA*

அச்சாணி வளம் பெற
புத்தாண்டினில்
வாழ்த்துகிறோம்

Kalyani
Cream House



***73, KASTHUTIAR ROAD***
***JAFFNA***

சிவானாஸ்
தையல் அகம்



நவீன சந்தை முன்பாக
இல. 4, வைரவர் கோவில்
வீதி, யாழ்ப்பாணம்.
உங்களை
அழகுபடுத்துவதே
எங்கள் குறிக்கோள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அச்சாணி' அச்சேற ஆசிகூறி வாழ்த்துகிறோம்


'மென்மைக்கு மெருகேற்ற இளமைக்கு எழிலூட்ட'

# நந்தினி நகை மாடம்


(தங்கப்பவுண் நகை வியாபாரம்)

**218G,** கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

**T.P - 021 - 3121**



**வாழ்த்துகிறோம்**



தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

# சிறி நதியா நகை மாடம்

(உரிமையாளர்:- நடராஜா சத்தியரூபன்)

**2G,** ஸ்ரான்லி வீதி

கிளை:- 56, கஸ்தூரியார் வீதி

கிளை 2 - சிறி கிருபாநகைமாடம்
131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



